# தனிப்பட்ட தகவல் பாதுகாப்புச் சட்டம் குறித்து நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது

## தனிப்பட்ட தகவல் பாதுகாப்புச் சட்டம் என்பது என்ன?

ஜூலை 2, 2014 முதல், தனிப்பட்ட தகவல் பாதுகாப்புச் சட்டம் 2012 (PDPA)-ன் கீழ் உள்ள தகவல் பாதுகாப்புக் கடப்பாடுகளானது[1], தனியார் நிறுவனங்களால்[2] சேகரித்து, பயன்படுத்தப்பட்டு, வெளியிடப்படும் உங்களின் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதற்கு உங்களை அனுமதிக்கும்.

நீங்கள் நிறுவனங்களிடமிருந்து தொலைபேசிவழி விளம்பரச் செய்திகளைப் பெற விரும்பவில்லை என்றால், உங்களுடைய சிங்கப்பூர் தொலைபேசி எண்ணைப் பதிவு செய்துகொள்வதற்காக, அழைக்கக்கூடாத எண்களுக்கான ஒரு தேசியப் பதிவகமும் உங்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

[1] தகவல் பாதுகாப்புக் கடப்பாடுகளானது இங்கு PDPA-ன் III முதல் VI வரையிலான பகுதிகளைக் குறிப்பிடுகின்றது.


[2] தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்தல், பயன்படுத்துதல் அல்லது வெளியிடுதல் தொடர்பாக, ஒரு பொது முகமை அல்லது ஒரு பொது முகமையின் சார்பாகச் செயல்படுகின்ற எந்த நிறுவனத்திற்கும் தகவல் பாதுகாப்புக் கடப்பாடுகள் பொருந்தாது.

pdpc PERSONAL DATA PROTECTION COMMISSION SINGAPORE

## இதன் நன்மைகள் யாவை?

PDPA ஆனது:

1.



உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் மீது உங்களுக்குக் கூடுதல் அதிகாரத்தை வழங்குகின்றது.


2.



உங்களுடைய தனிப்பட்ட தகவல்களைப் பார்வையிடுவதற்கும் திருத்தம் செய்வதற்கும் உங்களை அனுமதிக்கின்றது.

3.

நீங்கள் தேவையற்ற தொலைபேசிவழி விளம்பரச் செய்திகள் பெறுவதைக் குறைக்கின்றது.







## தனிப்பட்ட தகவல்கள் என்றால் என்ன?

உங்களைப் பற்றிய எந்தவொரு தகவலும் தனிப்பட்ட தகவலாகக் கருதப்பட முடியும்.

PDPA-வின் கீழ் உள்ள தனிப்பட்ட தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கலாம்:



- முழுப் பெயர்
- அடையாள அட்டை எண் அல்லது கடவுச்சீட்டு எண்
- ஒரு தனிநபரின் புகைப்படம் அல்லது காணொளிப் படம்
- கைபேசி எண்
- தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி
- கட்டைவிரல் ரேகை
- பெயர் மற்றும் குடியிருப்பு முகவரி





தொழில் நோக்கங்களுக்காக நீங்கள் அளிக்கும் தொடர்புத் தகவல்கள் (தொழில் தொடர்புத் தகவல்கள் எனவும் அறியப்படுகிறது) தகவல் பாதுகாப்புக் கடப்பாடுகளின் கீழ் வராது. உங்களுடைய பெயர், பதவி, தொழில் தொலைபேசி எண்/முகவரி/ மின்னஞ்சல் முகவரி/தொலைப்பிரதி எண் மற்றும் உங்களைப் பற்றிய வேறு ஏதேனும் ஒத்தத் தகவல்களை இது உள்ளடக்கலாம்.

## PDPA எவ்வாறு உங்களுக்குப் பொருந்தும்?

எந்த நிறுவனம் உங்களுடைய தகவல்களைச் சேகரிக்க முடியும், அவை எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும் மற்றும் அவை வெளியிடப்பட முடியுமா ஆகியவை குறித்து PDPA-வின் அறிமுகத்தைக் கொண்டு நீங்கள் முடிவெடுக்கலாம். தனிப்பட்ட தகவல்கள் உண்மையானவையா பொய்யானவையா என்பதைப் பொருட்படுத்தாமல், மின்னியல் மற்றும் மின்னியல் அல்லாத தனிப்பட்ட தகவல்கள் அனைத்தையும் PDPA பாதுகாக்கிறது.

உங்களுடைய சொந்த தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு உங்களுக்கும் உள்ளது. உங்களுடைய தனிப்பட்ட தகவல்களைக் கவனமாக நிர்வகிப்பதன் மூலம், அவை தவறாகப் பயன்படுத்தப்படும் ஆபத்துகளை நீங்கள் குறைத்திட முடியும்.

நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய சில விஷயங்கள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன:

## ஒப்புதலை வழங்குதல்

உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை நிறுவனங்கள் சேகரிப்பதற்கு, பயன்படுத்துவதற்கு அல்லது வெளியிடுவதற்கு முன்னர், அவர்கள் ஏன் உங்களுடைய தனிப்பட்ட தகவல்களைக் கேட்கின்றனர் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்தி, உங்களுடைய ஒப்புதலைப் பெற வேண்டும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை நீங்கள் முழுமனதோடு வழங்கினால், உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை நிறுவனங்கள் சேகரிப்பதற்கு, பயன்படுத்துவதற்கு அல்லது வெளியிடுவதற்கும் நீங்கள் அவர்களை அனுமதிக்கக் கூடும். இதுவே "கருதப்பட்ட ஒப்புதல்" என்று அழைக்கப்படுகிறது.

## எந்தத் தனிப்பட்ட தகவல்களை வழங்க வேண்டும் என்பதை அறிந்துகொள்ளுதல்

சிலநேரங்களில், உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை நீங்கள் வழங்க வேண்டி இருக்காது. நிறுவனங்கள் உங்களுக்கு வழங்குகின்ற ஒரு தயாரிப்புப் பொருளுக்கான அல்லது சேவைக்கான நியாயமான காரணத்திற்கு அப்பால், அவர்கள் உங்களுடைய தனிப்பட்ட தகவல்களைச் சேகரிப்பதற்கு, பயன்படுத்துவதற்கு அல்லது வெளியிடுவதற்கு ஒப்புக்கொள்ளுமாறு உங்களைக் கட்டாயப்படுத்த முடியாது.

## ஒப்புதலைத் திரும்பப் பெறுதல்

உங்களுடைய தனிப்பட்ட தகவல்களைச் சேகரிப்பதை, பயன்படுத்துவதை அல்லது வெளியிடுவதை நிறுத்துமாறு நீங்கள் ஒரு நிறுவனத்திடம் கூறலாம். ஒப்புதலைத் திரும்பப் பெறுவதற்கான உங்கள் வேண்டுகோளைச் செயல்படுத்துவதற்கு முன்னர், அதன் சாத்தியமான பின்விளைவுகளைப் பற்றி நிறுவனம் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். எனினும், நிறுவனம் உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை நீக்க அல்லது அழிக்க வேண்டிய அவசியமில்லை. அவற்றை, தொழில் அல்லது சட்டத் தேவைகள் நீடிக்கும் காலம் வரை அவர்கள் வைத்துக் கொள்ளலாம்.

## பார்வையிடுவதற்கு வேண்டுகோள் விடுத்தல்

ஒரு நிறுவனத்திடம் உள்ள உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களைக் காண நீங்கள் வேண்டுகோள் விடுக்கலாம். உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் கடந்த வருடத்தில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன அல்லது பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடும் அல்லது வெளியிடப்பட்டிருக்கக்கூடும் என்பதையும் நீங்கள் சரிபார்த்துக்கொள்ள முடியும். நீங்கள் ஒவ்வொரு முறையும் பார்வையிடுவதற்கு விடுக்கும் வேண்டுகோளுக்கு நிறுவனங்கள் ஒரு நிர்வாகக் கட்டணத்தை விதிக்க முடியும் அல்லது உங்களுடைய வேண்டுகோள் அற்பத்தனமானது எனக் கருதினால், அதை நிராகரிக்க முடியும்.

தனிப்பட்ட தகவல்களை உங்களிடம் வழங்குவதால் கீழ்கண்டவை நேரிடலாம் எனில், தகவல்களைப் பார்வையிட நிறுவனங்களால் உங்களுக்கு அனுமதி வழங்க முடியாது:

- உங்களுடைய பாதுகாப்புக்கு அல்லது உடல்நலம்/மனநலத்திற்கு உடனடியாக அல்லது மோசமாகத் தீங்கு ஏற்படுத்துதல்;
- வேறொருவரின் பாதுகாப்புக்கு அல்லது உடல்நலம்/மனநலத்திற்கு அச்சுறுத்தலாக இருத்தல்;
- வேறொருவரின் தனிப்பட்ட தகவல்களை வெளியிடுதல்;
- உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை வழங்கிய நபரின் அடையாளத்தை வெளியிடுதல்; அல்லது
- தேசிய நலனுக்கு எதிராக இருத்தல்.

## திருத்தம் செய்வதற்காக வேண்டுகோள் விடுத்தல்

நிறுவனத்திடம் உள்ள உங்களுடைய தனிப்பட்ட தகவல்களில் உள்ள ஒரு பிழையை அல்லது விடுபடலைத் திருத்துவதற்கு நீங்கள் வேண்டுகோள் விடுக்கலாம். நிறுவனம் அத்திருத்தத்தைச் செய்யாமல் இருப்பதற்கான ஒரு வலுவான காரணத்தைக் கொண்டிருக்காத வரை, அது தகவல்களைத் திருத்தி, கடந்த வருடத்தில் அத்தகவல்களைப் பெற்றுள்ள நிறுவனங்களுக்கு அவற்றை அனுப்பி வைக்க வேண்டும்; அல்லது நீங்கள் ஒப்புக்கொண்டால், தனிப்பட்ட தகவல்கள் வெளியிடப்பட்ட குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு மட்டுமே அவற்றை அனுப்ப வேண்டும்.

# PDPA பற்றி நீங்கள் எவ்வாறு மேலும் தெரிந்துகொள்ளலாம்?

PDPA குறித்தும் உங்களுடைய தனிப்பட்ட தகவல்களை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது குறித்தும் மேல் விவரங்கள் அறிய, அன்புகூர்ந்து www.pdpc.gov.sg என்ற தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு ஆணையத்தின் (PDPC) இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

இங்கு வழங்கப்பட்டுள்ள உள்ளடக்கங்களானது, சிங்கப்பூரில் உள்ள தனிப்பட்ட தகவல் பாதுகாப்புச் சட்டம் குறித்தப் பொதுவான தகவல்களாகும். இவை, அதிகாரப்பாணியாக அல்லது சட்டத்தின் முழுமையான அறிக்கையாக அல்லது ஒரு மாற்று சட்ட ஆலோசனையாக இருப்பதற்கு நோக்கம் கொண்டிருக்கவில்லை. PDPA குறித்த மேல் விவரங்களுக்கு, அன்புகூர்ந்து www.pdpc.gov.sg என்ற எங்களுடைய இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

பதிப்புரிமை நவம்பர் 2013 – சிங்கப்பூர் தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு ஆணையம் (PDPC) மற்றும் சிங்கப்பூர் தகவல்-தொடர்பு மேம்பாட்டு ஆணையம் (IDA)

இந்த வெளியீட்டின் உள்ளடக்கங்களானது, பதிப்புரிமை, வணிகச் சின்னம் மற்றும் தனியுடைமை உரிமைகளின் பிற வடிவங்களால் பாதுகாக்கப்படுன்கிறன. அனைத்து உரிமைகள், தலைப்பு மற்றும் உள்ளடக்கங்களில் உள்ள ஈடுபாடு ஆகியவை, மற்றவகையில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாத வரை, PDPC மற்றும்/அல்லது IDA-வால் உரிமை கொண்டாடப்படுகின்றன, இவற்றுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளன அல்லது இவற்றால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்த வெளியீட்டை எழுத்துப்பூர்வமான அனுமதியின்றி, முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மறு உற்பத்தி செய்யவோ, மறுவெளியீடு செய்யவோ அல்லது பரப்பவோ முடியாது.